BRAMPTON Service and Information Update

# கோவிட் – 19 (COVID-19) தொற்று பரவலின் எதிரொலியாக அனைத்து கல்லறைத் தோட்டங்களையும் ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் மூடுகிறது

ப்ராம்ப்ட்டன், ON (ஏப்ரல் 7, 2020) – ஏப்ரல் 8, புதன்கிழமை முதல் அடுத்த அறிவிப்பு வரும் வரை, குடியிருப்பு வாசிகள் மற்றும் பணியாளர்களின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு கருதி, ப்ராம்ப்ட்டன் நகரின் அனைத்து கல்லறைத் தோட்டங்களும்,மூடப்படுகின்றன.

சவங்களை அடக்கம் செய்தல் மற்றும் சவ அடக்கம் செய்வதற்கான காலியிடங்களின் விற்பனை போன்ற அத்தியாவசிய சேவைகள், முன் பதிவுகளின் பேரில் மட்டுமே தொடர்ந்து வழங்கப்படும். முன்பதிவு செய்து கொள்ள, எண் 905.874.2997 ஐ அழைக்குமாறு குடியிருப்புவாசிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இப்படி மூடப்படுவது பற்றிய அறிவுறுத்தல் ப்ராம்ப்ட்டன் நகரின் அனைத்து கல்லறைத்தோட்டங்களிலும் அறிவிப்பு பதாகையாக வைக்கப்படும்.

10, வில்ஸன் அவென்யூ வில் இருக்கின்ற ப்ராம்ப்ட்டன் கல்லறைத் தோட்டத்திற்கும், மற்றும் நகரமெங்கிலும் இருக்கின்ற முன்னோடியான கனவான்களுக்கான 25 கல்லறைத்தோட்டங்களுக்கும் ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமே பொறுப்பு வகிக்கிறது. ப்ராம்ப்ட்டன் நகரில் இருக்கும் கல்லறைத்தோட்டங்களுக்கான பட்டியல் இங்கு கிடைக்கும்.

கோவிட் -19 (COVID-19) தொற்று பரவலுக்கு எதிரான ப்ராப்ட்டன் நகர நிர்வாகத்தின் எதிர் நடவடிக்கைகள் பற்றிய மிக சமீபத்திய புது தகவல்களுக்கு வருகை புரியவும்: www.brampton.ca/COVID19.

-30-

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
*905-874-3426 | Monika.Duggal@brampton.ca*